**மாத்தறை பல்கலைக்கழகக் கல்லூரி - 2019**

-----------------------------------------------------------------------------

## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மாத்தறை பல்கலைக்கழகக் கல்லூரியின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளினதும் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் மாத்தறை பல்கலைக்கழகக் கல்லூரியின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கல்லூரியின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிதியம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

கல்லூரியின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கல்லூரியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வு விடயப்பரப்பு

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கல்லூரியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக கல்லூரியின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக கல்லூரியின்

தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலம் பினிவருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது கல்லூரியின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது கல்லூரியின் நிர்வாக கல்லூரியினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க கல்லூரி செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1. நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

கொடுக்கல் வாங்கல்களை முகாமைத்துவத்தின் பொது மற்றும் நிர்ணயிக்கப்பட்ட அதிகாரத்துடன் அமுல்படுத்துதல் தொடர்புபட்ட அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்குத் தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்தல், மற்றும் சொத்துக்களுக்கான கணக்களிப் பொறுப்பினைப் பேணுதல் முகாமைத்துவத்தின் பொது மற்றும் நிர்ணயிக்கப்பட்ட அதிகாரத்துடன் மாத்திரம் சொத்துக்களை அணுகுதல், பதிவுசெய்யப்பட்ட சொத்துக்களுக்காக கணக்களிப் பொறுப்பினைப் பேணி சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியின் போது இணக்கம் செய்தல், மற்றும் வித்தியாசம் காணப்படுமாயிருந்தால் அவை சம்பந்தமாக முறையான நடவடிக்கை எடுத்தல் முதலியவற்றிற்காக நியாயமான உறுதிப்படுத்திலினைப் பெற்றுக்கொள்வதற்குப் போதியளவு ''சிறப்பாகத் திட்டமிடப்பட்ட'' உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமை கல்லூரியினால் பேணுதல் அத்தியாவசதியமானதாகும்.

### 1.5.2 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிலிருந்து கல்லூரி பின்பற்றிய பெறுமானத்தேய்வுக் கொள்கை 03 வகையான சொத்துக்கள் தொடர்பாக திருத்தப்பட்டிருந்ததுடன் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் இலக்கம் 03 இன் 27 ஆம் பிரிவின் பிரகாரம் செம்மையாக்கும் போது கணிப்பீடு செய்யும் தவறின் காரணமாக மூலதன மானியக் கணக்கின் மீதி ரூபா 364,632 ஆல் அதிகரித்தும் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் கணக்கின் மீதி அத்தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | பெறுமானத்தேய்வை கணிப்பீடு செய்யும் போது கணனிகள், புத்தகங்கள் மற்றும் ஏனைய சொத்துக்கள் தொடர்பாக 2015 ஆம் ஆண்டிற்கே பெறுமானத்தேய்வு செய்யப்பட வேண்டிய போதிலும், கொள்வனவு செய்த திகதியை அடிப்படையாகக் கொண்டு பெறுமானத்தேய்வு கணிப்பீடு செய்ததன் காரணமாக உரிய வித்தியாசம் உருவாகி இருந்தது. | கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் சரியான செம்மையாக்கல்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) தொழில்சார் தொழில்நுட்ப பல்கலைகழக்கத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட கணக்கு விடயங்களின் பிரகாரம் இயலளவு அபிவிருத்திக்காக மேற்கொள்ளப்பட்ட செலவுகள் மூலதனச் செலவாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் போது நிரந்தர நியமனத்தைப் பெற்ற ஒரு உத்தியோகத்தருக்கு கலாநிதி பட்டத்திற்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 450,000 செலவு மீண்டு வரும் செலவாகக் கருதி கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | பல்கலைக்கழக கல்லூரியின் நிருவாக சபையின் அங்கீகாரத்தின் கீழ் இயலளவு அபிவிருத்திக்காக மேற்கொள்ளப்பட்ட அனைத்து செலவுகளும் மீண்டும் வரும் செலவுகள் மற்றும் நிதியமாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்படுகின்றது. | இயலளவு அபிவிருத்திக்காக மேற்கொள்ளப்பட்ட செலவுகள் மூலதனமாக்கப் படுதல் வேண்டும். |
| (ஆ) கடந்த ஆண்டு தொடர்பாக தொழில்சார் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தால் மீளளிப்புச் செய்யப்பட்ட ரூபா 286,000 பணம் முன்னைய ஆண்டிற்கான இலாபத்திற்கு | 2018 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 286,000 செலவினை மீளளிப்புச் செய்யுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்தும் திறன் | அட்டுறு கருதுகோளைப் பின்பற்றி கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செம்மையாக்குவதற்குப் பதிலாக மீளாய்வாண்டிற்கான வருமானத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | அபிவிருத்தி நிதியத்திலிருந்து இதற்கு எதுவித பதிலும் கிடைக்காததன் காரணமாக 2018 ஆம் ஆண்டில் கிடைக்க வேண்டிய பணமாக கணக்கீடு செய்யப்படவில்லை. | |
| (இ) | பல்கலைக்கழக் கல்லூரிக்கு இணைத்துக் கொள்ளப்பட்டு சேவையாற்றிய ஒரு உத்தியோகத்தர் ஒரு மாதத்திற்கு முன்னர் அறிவித்தல் கொடுக்காது சேவையிலிருந்து விலகியதன் காரணமாக அறவிடப்பட்ட ரூபா 43,103 தொகையான ஒரு மாதத்திற்கான மொத்த சம்பளம் ஏனைய வருமானக் கணக்கிற்கு செலவு வைப்பதற்குப் பதிலாக சம்பளக் கணக்கிற்குச் செலவு வைக்கப்பட்டிருந்தது. | சம்பளக் கொடுப்பனவை கணக்கீடு செய்யும் போது சம்பளம் மற்றும் அதற்குரிய ஏனைய செலவுகள் கணக்குகளில் பதியப்பட்டதுடன் விலகிச்சென்ற ஊழியரிடமிருந்து அறவிடப்பட்ட முழுப் பணமும் சம்பளம் மற்றும் அது தொடர்பான ஏனைய செலவுகளுக்கு பகிரப்பட்டு உரிய கணக்குகளில் பதியப்பட்டது. | சம்பளங்கள் மற்றும் கூலிகளின் கீழ் மேற்கொள்ளப்பட்ட செலவுகள் மாத்திரம் அக்கணக்கின் கீழ் காட்டப்படுதல் வேண்டும். |

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியிரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| (i) நிதிப்பிரமாணம் 110 | ஒவ்வொரு நிறுவனத்தினாலும் நி.பி 102 இன் கீழ் குறிப்பிடப்பட்ட நட்டங்கள் தொடர்பான விபரக் குறிப்பினைப் பேணுவதற்காக நட்டங்கள் தொடர்பான பதிவேடு பேணப்பட வேண்டிய போதிலும், மாத்தறை பல்கலைக்கழகக் கழகக்கல்லூரி அவ்வாறான பதிவேட்டினைப் பேணியிருக்கவில்லை. | நட்டங்கள் தொடர்பான பதிவேடு தற்பொழுது பேணப்படாததுடன் எதிர்காலத்தில் அது தொடர்பான விடயங்களை தேடிப்பார்த்து மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நட்டங்கள் தொடர்பான பதிவேடு பேணப்படுதல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ii) | நிதிப்பிரமாணம் 880 மற்றும் 881 | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்களை இனங்கண்டு பிணை வைப்புக்களைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | அமைச்சின் மூலம் பிணை வைப்புச் செய்ய வேண்டிய உத்தியோகத்தர்கள் மற்றும் வைப்புச் செய்ய வேண்டிய பணத்தின் அளவு தொடர்பாக தெரியப்படுத்தியதன் பின்னர் அது தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்கு எதிர்பார்க்கின்றேன். | வைப்புச் செய்ய வேண்டிய உத்தியோகத்தர் களிடமிருந்து வைப்புக்களைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iii) | நிதிப்பிரமாணம் 1645 | நிறுவனத்திற்குச் சொந்தமான வாகனங்கள் சம்பந்தமாக பொது 267 படிவத்தின் பிரகாரம் சம்பவக் குறிப்பு புத்தகங்கள் பேணப்பட வேண்டிய போதிலும், பேணப்பட்ட சம்பவகுறிப்பு புத்தகங்கள் முறைப்படியாக பேணப்பட்டிருக்க வில்லை. | எதிர்காலத்தில் அதனை முறைப்படியாக பேணுவதற்கு நடவடிக்கை எடுப்பேன். | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் சம்பவக் குறிப்பு புத்தகங்கள் முறைப்படியாக பேணப்படுதல் வேண்டும். |
| (iv) | நிதிப்பிரமாணம் 1646 | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் 208(4) பொதுப் படிவத்தில் எழுதப்பட்ட பயணங்கள் தொடர்பான மாதாந்தப் பொழிப்பின் மூலப் பிரதியும் நாளாந்த ஓட்ட அட்டவணைகள் தொடர்பான விபரமும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | நாளாந்த ஓட்ட அட்டவணைகள் தொடர்பான விபரத்தை எதிர்காலத்தில் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் ஓட்ட அட்டவணைகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப் படுதல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 825,3352 மிகையாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 627,212 ஆகும். அதற்கிணங்க நிதி விளைவுகளில் ரூபா 1,452,564 முன்னேற்றம் அவதானிக்கப்பட்டது. மீண்டுவரும் மானியம் மற்றும் ஏனைய வருமானங்கள் அதிகரித்தல் இந்த முன்னேற்றத்திற்கு பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பல்கலைக்கழகக் கல்லூரியினால் நடாத்தப்படுகின்ற கற்கை நெறிகளுக்காக மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளும் நடைமுறையின் பிரகாரம் ஒரு கற்கை நெறியில் சம மட்டத்தில் தகைமைகளைப் பூர்த்தி செய்த 35 மாணவர்கள் குழுவாக இருக்க வேண்டிய போதிலும், 04 ஆண்டுகளில் நுட்பவியல் கற்கை நெறிகளைத் தொடருகின்ற மாணவர்களின் எண்ணிக்கை 02 இற்கும் 19 இற்கும் இடைப்பட்ட வீச்சில் அல்லது 06 சதவீதத்திற்கும் 54 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சினைக் கொண்டிருந்தது. | எங்கள் நிறுவனத்தினால் செய்திப் பத்திரிகை மற்றும் இணையத் தளங்களினூடாக மேம்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதுடன் மூன்றாம் நிலை மற்றும் தொழில்சார் பயிற்சி அதிகார சபையினால் மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டங்களின் மூலமும் மேம்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. மேலும், எதிர்காலத்தில் மாணவர்களுக்கு தெரியப்படுத்தலினை விரிவுபடுத்துவதற்கு எதிர்பார்க்கின்றேன். | கற்கை நெறிகளுக்கு மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்காக மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல் தொடர்பாக கவனம் செலுத்துதல் வேண்டும். |
| (ஆ) | பல்கலைக்கழக கல்லூரியினால் முகாமைத்துவ சபை மற்றும் கல்விச் சபை ஒரு மாதத்திற்கு ஒரு தடவை வீதம் கூட்டங்களை நடாத்தியிருந்தும் கல்லூரியின் பிரதான சிக்கலான பாடவிதானத்தில் உள்ளடக்கப்பட வேண்டிய மணித்தியாலங்களின் எண்ணிக்கை | கல்விப் பிரிவுத் தலைவர்கள் மற்றும் கற்கை நெறி ஒருங்கிணைப்பாளர்களின் ஊடாக பாடவிதானங்களில் உள்ளடக்கப்பட வேண்டிய மணித்தியால அளவுகளில் உள்ளடங்கல்கள் சம்பந்தமாக தீர்வுகளைப் பெற்று அமுல்படுத்தப்பட்டதனால் பல்கலைக்கழக கல்லூரியின் முகாமைத்துவச் சபை | நிறுவனத்தின் மனித வளங்களை ஆக்கபூர்வமாகப் பயன்படுத்தி உள்ளடக்கப்படாத பாடங்களின் பகுதியை உள்ளடக்கிக் கொள்வது தொடர்பாக கவனம் செலுத்தப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உள்ளடக்கப்படாமை சம்பந்தமாக அச்சபை கவனம் செலுத்தியது என்பதற்கு கூட்டக் குறிப்புக்களின் பிரகாரம் வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | மற்றும் கல்விச் சபை இச்சிக்கலை கலந்துரையாட வேண்டியதன் அளவுக்கு அத்தியாவசியம் உருவாகியிருக்கவில்லை. | |
| (இ) | மீளாய்வாண்டின் போது பூரணப்படுத்தப்பட்ட 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் ஆரம்பிக்கப்பட்ட 05 கற்கை நெறிகள் தொடர்பாக சேர்த்துக் கொள்ளப்பட்ட மாணவர்களில் 26 சதவீதத்திற்கும் 100 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சுடையவானவர்கள் கற்கை நெறிகளை கைவிட்டுச் செல்லும் போக்கும் பரீட்சைகளில் சித்தியடையாமையின் போக்கும் 29 சதவீதத்திற்கும் 100 சதவீதத்திற்கும் இடைப்பட்டதாகக் காணப்பட்டது. இவ்வாறு பதிவு செய்த மாணவர்கள் கற்கை நெறிகளை கைவிட்டுச் செல்வதற்கான காரணமும் பரீட்சைகளில் சித்தியடையாமைக்கு தாக்கமளிக்கும் காரணமும் என்ன என்பதனை ஆராய்ந்து பார்த்து தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு முகாமைத்துவம் கவனம் செலுத்தியிருக்கவில்லை. | இந்த நிலைமையைக் குறைப்பதற்காக உயர் தொழில்நுட்ப டிப்ளோமா மற்றும் வழங்கப்படுகின்ற பயிற்சியின் முக்கியத்துவம் சம்பந்தமாக மாணவர்களுக்குத் தெரியப்படுத்தும் விரிவுரை மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டிருந்தும் நடைமுறைக் காரணங்களின் அடிப்படையில் சில மட்டுப்படுத்தப்பட்ட அளவான மாணவர்கள் கற்கை நெறிகளை விட்டுச் செல்லும் நிலைமையைக் காணக்கூடியதாக இருந்தது. மாணவர்கள் பரீட்சைகளில் சித்தியடையாமை மாணவர்களின் பலவீனத்தின் அடிப்படையில் இடம்பெறுவதாகவும் எதிர்காலத்தில் பலவீனமான மாணவர்களுக்கு மேலும் அறிவினை வழங்குவதினூடாக அவர்கள் பரீட்சையில் சித்தியடையும் சதவீதத்தினை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கற்கை நெறிகளுக்காக சேர்த்துக் கொள்ளப்படுகின்ற மாணவர்களை நிறுத்தி வைத்துக் கொள்வதற்கும் பரீட்சையில் சித்தியடையாத மாணவர்கள் தொடர்பாக அதிக கவனம் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.2 செயற்பாட்டுச் செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) 2019 பெப்ரவரியிலிருந்து யூலை வரை அமுல்படுத்தப்பட்ட முதலாவது செமஸ்டருக்கு 09 கற்கை நெறிகள் தொடர்பாக 1,238 மணித்தியாலங்கள் கோட்பாட்டு (theory) விரிவுரைகளையும் 451 மணித்தியாலங்கள் செயன்முறைப் பயிற்சிகளையும் 13 வெளிவாரி விரிவுரையாளர்களைக் கொண்டு உள்ளடக்குவதற்குத் திட்டமிடப்பட்டிருந்தும் கோட்பாட்டு விரிவுரை 579.5 மணித்தியாலங்களும் செயன்முறைப் பயிற்சி 79 மணித்தியாலங்களும் மாத்திரம் உள்ளடக்கக் கூடியதாக இருந்தது. இவற்றில் 11 வெளிவாரி விரிவுரையாளர்களுக்கு ஒப்படைக்கப்பட்ட 231.5 மணித்தியால செயன்முறைப் பயிற்சி விரிவுரையில் ஒரு மணித்தியாலமேனும் ஈடுசெய்யப்பட்டிருக்க வில்லை. அதற்கிணங்க, நடாத்துவதற்குத் திட்டமிடப்பட்ட விரிவுரை மணித்தியாலங்களும் செயன்முறைப் பயிற்சி மணித்தியாலங்களும் முறையே 53 சதவீதம் மற்றும் 82 சதவீதம் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. | பொருத்தமான வெளிவாரி விரிவுரையாளர்களின் பற்றாக்குறை காணப்படுவதன் காரணமாக இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது. செம்ஸ்டரின் இறுதி அரைப்பகுதியில் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளின் தரத்திற்கு பாதிப்பு ஏற்படாத வகையில் தொடக்க கோட்பாட்டு மற்றும் அனைத்து செயன்முறைப் பயிற்சி செயற்பாடுகளுக்கு விடய ஆய்வு (thesis) வாயிலாக உள்ளடக்கப்பட்டிருக்கும். | அனைத்து பாட விடயங்களையும் உள்ளடக்கும் வகையில் விரிவுரைகளும் நடைமுறைப் பயிற்சி விரிவுரைகளும் நடைமுறைப்படுத்தப் படுதல் வேண்டும். |
| (ஆ) மீளாய்வாண்டின் போது அமுல்படுத்தப்படுகின்ற கற்கை நெறிகளில் NVQ-V இன் முதலாம் செமஸ்டர் மற்றும் NVQ-VI இன் இரண்டாம் செமஸ்டரில் 14 பாடங்களுக்கு 12,706 விரிவுரை | | |

மணித்தியாலங்களையும் 11 பாடங்களுக்கு 239 பிரயோகப் பயிற்சி விரிவுரை மணித்தியாலங்களையும் உள்ளடக்குவதற்கு திட்டமிடப்பட்டிருந்தும் முறையே 5,889 விரிவுரை மணித்தியாலங்கள் உள்ளடக்கப் பட்டிருந்ததுடன் பிரயோக பயிற்சியை ஒரு மணித்தியாலமேனும் உள்ளடக்குவதற்கு முடியாதிருந்தது.

### 3.2 விளைவற்ற அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| சுயமாக நகரும் தொழில்நுட்ப பிரிவினால் நடாத்தப்படுகின்ற கற்கைநெறிகள் பிரயோக செயற்பாடுகளுடன் நேரடியாகத் தொடர்புபடுவதனால் அதற்காக 2015 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 3,425,000 பெறுமதியான உபகரணங்கள் மீளாய்வாண்டின் இறுதி வரை ஸ்தாபிக்கப்படாததன் காரணமாக மாணவர்களின் பிரயோக பயிற்சிச் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு முடியாமையால் கற்கைநெறிகளின் தரம் வீழ்ச்சியடைந்துள்ளது என்பது கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | உரிய உபகரணங்களைப் பொருத்துவதற்காக போதியளவு நிலப்பகுதி இந்த நிறுவனத்திடம் இல்லை. மாற்றுக் காணி கிடைத்ததன் பின்னர் உரிய உபகரணத்தை உரிய நியமத்திற்கு இணங்க பொருத்துவதற்கு நடவடிக்கை எடுப்பேன். | இவ்வாறான கற்கை நெறிகளின் தரம் பிரயோக செயற்பாடுகளின் அடிப்படையில் நிலை நிறுத்தப்படுவதனால் மாணவர்களின் பிரயோக செயற்பாடுகளை உச்சமட்டத்தில் பேணுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.3 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டில் மூலதனச் சொத்துக்களை வாங்குவதற்காகப் பெற்றுக் கொள்ளப்பட்ட நிதிஏற்பாட்டினை மிகைத்து மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி ரூபா 1,334,794 பொறுப்புக்கு கடப்பாடு செய்யப்பட்டிருந்தது. | 2019 ஆம் ஆண்டிற்கான மூலதன செலவுகளுக்காக போதியளவில் பணம் விடுவிக்கப்படாமையின் காரணமாக 2019 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்த பல மூலதனப் பொருட்களுக்காக பணம் | பெறுகைகளை மேற்கொள்ளும் போது கிடைத்த நிதி ஏற்பாட்டின் போதியளவானவை தொடர்பாக கவனத்தில் கொண்டு |

| | | |
|---|---|---|
| | செலுத்த முடியாதிருந்ததுடன் ரூபா 1,334,794 பணம் கடன்பட்டோராக அறிக்கையிடப்பட்டுள்ளது. | பெறுகைகள் மேற்கொள்ளப் படுதல் வேண்டும். |

### 3.4 மனிதவளங்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியளவில் 03 விரிவுரையாளர் பதவிகள், 02 காட்சிப்படுத்துனர் பதவிகள், 01 ஆங்கில விரிவுரையாளர் பதவி, 01 உதவி நூலகர் பதவி, 01 முகாமைத்துவ உதவியாளர் பதவி, 01 காப்புறுதி உத்தியோகத்தர் பதவி என்பவற்றை உள்ளடக்கி ஒட்டு மொத்தமாக 09 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் அவ்வெற்றிடங்களை நிரப்புவதற்கு 2020 மே 30 ஆந் திகதி வரையும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | விரைவாக நேர்முகப் பரீட்சைகளை நடாத்தி அனைத்து வெற்றிடங்களையும் நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | தேவையான மனித வளங்களை இனங்கண்டு வெற்றிடங்களை நிரப்புவதற்கு விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 இணைந்த திட்டம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிறுவனத்தின் வலிமை, பலவீனம், வாய்ப்பு, ஆபத்து என்பவற்றை இனங்கண்டு அதற்கிணங்க இலக்குகளைத் தோற்றுவித்து அந்த இலக்குகளை அடைந்து கொள்வதற்கு உத்தேச செயற்பாடுகளை உள்ளடக்கும் வகையில் இணைந்த திட்டம் தயாரிக்கப்படவில்லை. | 2019 ஆம் ஆண்டின் போது இணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் அதனை வருடாந்தம் நாளதுவரையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிறுவனத்தின் தூரநோக்கு, செயற்பணிகள், குறிக்கோள்களும் நோக்கங்களும் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு இணைந்த திட்டம் தயாரிக்கப்பட வேண்டியதுடன் வருடாந்த செயலாற்றலை அடிப்படையாகக் கொண்டு நாளதுவரையாக்கப் படுதல் வேண்டும். |

**4.2 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 2014/1 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் பல்கலைக்கழக கல்லூரியினால் செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்படவில்லை. மீளாய்வாண்டிற்காகத் தயாரிக்கப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டத்தில் 18 செயற்பாட்டு நடவடிக்கைகள் சம்பந்தமான செயல்முன்னேற்ற அறிக்கை தயாரிக்கப்படாததன் காரணமாக செயல்முன்னேற்ற மீளாய்விற்கு உட்படுவதும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | எதிர்காலத்தில் செயல்முன்னேற்ற மீளாய்வினை மேற்கொண்டு செயல்முன்னேற்றத்தினை அடைந்து கொள்வதற்கு தேவையான ஆலோசனை உரிய பிரிவுகளுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிறுவனத்தின் முகாமைத்துவத் தினால் பொருத்தமான செயல் முன்னேற்ற மீளாய்வினை மேற்கொண்டு இலக்குகளை அடைந்து கொள்ள முடியாத பிரிவுகளின் செயல் முன்னேற்றத்தைப் பெற்றுக் கொள்வதற்கு ஆலோசனைகள் மற்றும் நடைமுறைகள் எடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | மேற்கூறிய நிலைமையை கவனத்தில் கொண்டு ஆண்டின் போது நிறைவேற்றப்பட்ட செயற்பாடுகள் செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்க மேற்கொள்ளப்பட்டதா என்பதுவும் முகாமைத்துவத்தினால் எதிர்பார்த்தவாறு திட்டத்தின் இலக்குகள் நிறைவேற்றப்பட்டதா என்பதுவும் பின்தொடர் நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டிருக்க வில்லை. | முறைப்படியாக கோவைகளைப் பேணி செயல்முன்னேற்ற மீளாய்வினை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்காய்வுத் திகதியின் பின்னர் பின்தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதற்கு எதுவித ஆவணமும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப் படாததுடன் இவ்வாறு மதிப்பீடு செய்யப்பட்டிருக்கு மாயிருந்தால் அதற்கான அறிக்கைகள் தயாரிக்கப்படுதல் வேண்டும். |

4.3 **உள்ளகக் கணக்காய்வு**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் 133 ஆம் பிரமாணத்தின் பிரகாரம் பல்கலைக்கழகக் கல்லூரியில் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினைத் தோற்றுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் தொழில்சார் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தின் உள்ளகக் கணக்காய்வு பிரிவினாலும் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | எங்கள் நிறுவனத்தில் ஒரு உள்ளகக் கணக்காய்வாளர் இல்லாததனால் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினைத் தோற்றுவிப்பதற்கு முடியாதிருந்தது. எனவே, உள்ளகக் கணக்காய்வினையும் மேற்கொள்ள முடியாதிருந்தது. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினைத் தோற்றுவித்து கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும். |

4.4 **கணக்காய்வுக் குழு**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2010 திசெம்பர் 14 ஆந் திகதிய பீஈடீ 55 ஆம் இலக்க அரசாங்க தொழில்முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் பல்கலைக்கழக கல்லூரியின் முகாமைத்துவ சபையால் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு ஸ்தாபிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் கடந்த ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையிலும் இது சம்பந்தமாக கவனம் செலுத்தப்பட்டது. | எங்களின் நிறுவனத்தினுள் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு இல்லாததனால் 2017 ஆம் ஆண்டிற்காக தொழில்சார் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தில் காணப்பட்ட கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவிற்கு இணைத்துக் கொள்ளப்பட்டு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு நடாத்தப்பட்டது. | தொழில்சார் தொழில்நுட்ப பல்கலைக் கழகத்திற்கு இணைத்துக் கொள்ளப்பட்டு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு நடாத்தப்பட்டிருந்தும் அதற்காக நிறுவனத்தின் உயர் முகாமைத்துவத்தில் உள்ள உத்தியோகத்தர்கள் பங்குபற்ற வேண்டியதுடன் நிறுவனத்தின் நடவடிக்கைகள் தொடர்பாக கலந்துரையாடப் படல் வேண்டும். |

### 4.5 நிறைபேறான அபிவிருத்தி இலக்குகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| ஐக்கிய நாடுகளின் அமைப்பின் 2030 நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலின் பிரகாரம் மாத்தறை பல்கலைக்கழக கல்லூரியினால் அடைந்து கொள்ள வேண்டிய குறிக்கோள்களையும் இலக்குகளையும் இனங்காணல் மற்றும் அந்த அபிவிருத்தி இலக்குகளையும் குறிக்கோள்களையும் அளவீடு செய்வதற்கான குறிகாட்டிகளை இனங்காணல் மீளாய்வாண்டின் இறுதிவரை இடம்பெற்றிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | 2018 ஆம் ஆண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டத்தில் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளுடன் உள்ள தொடர்பு விளக்கமாக சமர்ப்பிக்கப்படாததினால் 2018 ஆம் ஆண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட செயற்பாடுகள் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளுடனான தொடர்பினைக் காட்டும் ஆவணத்தை இதனுடன் சமர்ப்பிக்கின்றேன். | செயல் நடவடிக்கைத் திட்டத்திற்கு நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் உள்ளடக்கப்பட்டு நிறுவனத்தின் குறிக்கோள்களுடன் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |